# <u>அறிவித்தல்</u> B

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் **“விடுமுறை நாட்கள் (திருத்தம்)”** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் ஊடாக சட்டத்திற்கு மேலதிக தெளிவு வழங்கப்படுமென உயர்நீதிமன்ற தீர்ப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.